IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw10 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : தினேஷ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.12.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் டிப்ளமொ மெக்கானிக் இன்ஜினியரிங் படித்து வருகிறேன். எனக்கு 19 வயது ஆகிறது. 09.08.2022 ம் தேதி எனது வீட்டிலிருந்து இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பாதையாத்திரை சென்றிருந்தனர். நான் இரண்டு நாட்கள் கழித்து 11.08.2022 ம் தேதி நான் மற்றும் 10 க்கு மேற்பட்ட நபர்கள் டாட்டா ஏசி வண்டியில் இருக்கன்குடிக்கு

சென்றோம். வண்டி எண் ஞாபகமில்லை. சிப்பிபாறை விலக்கில் நான் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த டிப்பர் லாரி அதிவேகமாக நிதானம் இல்லாமல் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதியது. பின்னர் அன்று அங்கியிருந்த பக்கத்து ஊர்காரர்கள் எங்களுக்கு உதவி செய்தனர். சம்பவத்தில் 19 நபர்களுக்கு சிறு சிறு காயம் எற்பட்டது. ஒரு அக்காவும், ஒரு குழந்தையும் இறந்துவிட்டனர். இறந்து போன அக்காவின் பெயர் லீலாவதி, குழந்தையின் கபிலேஷ் ஆகும். எனக்கு வலது கையின் புஜம் பகுதியில் எலும்பு உடைந்துவிட்டது. வலது பக்க தலையிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு எங்களை சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். லாரி ஒட்டிய நபரின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். சம்பவ இடத்தில் மயங்கிவிட்டதால் லாரி ஒட்டிய நபரை பார்க்கவில்லை.

குறுக்கு விசாரணை

நான் சென்ற டாட்டா ஏசி வாகனத்தில் நான் எந்த பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன் என்றால் வாகனத்தின் பின்னாடி கதவுக்கு வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். அந்த வாகனம் தார்பாயால் மூடப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். டாட்டா ஏசி வாகனத்தில் ஆட்களை ஏற்றி செல்ல அனுமதி இல்லை என்றால் சரிதான். நான் வாகனத்திற்குள் உட்கார்ந்திருந்ததால் வாகனத்திற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் நாங்கள் சென்ற வாகனம் எவ்வாறு சென்றது எதிரே வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனத்தை யார் ஒட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் வேகமாக வந்ததா அல்லது நிதானமாக வந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்துக்கான முழு காரணம் டாட்டா ஏசி வாகன ஓட்டுநனர் தான் காரணம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw11 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : பரமசிவன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.12.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் சுகாதார பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். 09.08.2022ம் தேதி எனது ஊரிலிருந்து இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பாதையாத்திரை குடும்பத்தோடு சென்றிருந்தனர். நாங்கள் 11.08.2022ம் தேதி நான், எனது பிள்ளைகள் மற்றும் 19க்கு மேற்பட்ட நபர்கள் டாட்டா ஏசி வண்டியில் இருக்கன்குடிக்கு சென்றோம். வண்டி எண்

ஞாபகமில்லை. ஊரின் பெயர் தெரிந்த அளவில் மைபாறை ஆகும். அந்த ஊர் வழியாக வந்து கொண்டிருந்த போது எங்கள் வாகனத்தின் மீது வேறு வாகனம் மோதியது. எந்த வாகனம் என்று எனக்கு ஞாபகமில்லை. வண்டியில் பயணம் செய்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு வலது பக்க முட்டி காலிலும், இடது பக்க தலையிலும் காயம் ஏற்பட்டது. அதில் இரண்டு நபர்கள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். எங்கள் வாகனத்தின் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநனர் எனக்கு தெரியாது. நான் பின்னாடி இருந்தேன். மயக்கத்தில் இருந்தேன்.

குறுக்கு விசாரணை

நாங்கள் சென்ற டாட்டா ஏசி வாகனத்தில் ஆட்களை ஏற்றி செல்லுவதற்கு அனுமதியில்லை என்றால் சரிதான். இந்த விபத்துக்கான முழு காரணம் டாட்டா ஏசி வாகன ஓட்டுநனர் தான் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw12 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : ரமேஷ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

14.12.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். 09.08.2022 ம் தேதி எனது ஊரிலிருந்து இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பாதையாத்திரையாக நண்பர்கள் சென்றிருந்தனர். நாங்கள் 11.08.2022 ம் தேதி நான் மற்றும் 19 க்கு மேற்பட்ட நபர்கள் டாட்டா ஏசி வண்டியில் இருக்கன்குடிக்கு சென்றோம். வண்டி எண் ஞாபகமில்லை.

சிப்பிபாறை அருகே நாங்கள் சென்று கொண்டிருந்த போது எங்கள் வாகனத்தின் மீது டிப்பர் லாரி மோதியது. டிப்பர் லாரி எங்களுக்கு எதிரே வேகமாக வந்தது. வண்டியில் பயணம் செய்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு வலது கை முட்டியிலும் தலையின் நடுபகுதியிலும் காயம் ஏற்பட்டது. அதில் இரண்டு நபர்கள் இறந்துவிட்டார்கள். அந்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுநனர் பெயர் எனக்கு மறந்துவிட்டது. பின்னர் இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

நாங்கள் சென்ற வாகனத்தில் நான் எந்த பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன் என்றால் பின்பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். அந்த வாகனம் தார்பாயால் மூடபட்டிருந்தது என்றால் சரிதான். இந்த விபத்து நடந்ததாக சொல்லும் நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். நான் வாகனத்தின் பின்பக்கம் உட்கார்ந்திருந்ததால் நாங்கள் சென்ற வாகனம் எவ்வாறு சென்றது எதிரே வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். டிப்பர் லாரியை யார் ஒட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் சென்ற டாட்டா ஏசி வாகனத்தில் ஆட்களை ஏற்றி செல்லுவதற்கு அனுமதியில்லை என்றால் சரிதான். இந்த விபத்துக்கான முழு காரணம் டாட்டா ஏசி வாகன ஓட்டுநனர் தான் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.